# கோவில்பட்டி நகராட்சி
## சாதாரணக் கூட்டம்

நிகழும் விகாரி வருடம் ஆடி திங்கள் 19, நாள்: 29.07.2021ம் தேதி வியாழக் கிழமை காலை 11.00 மணியளவில் நகராட்சி அலுவலகத்தில் வைத்து சாதாரண கூட்டம் நடைபெறும்.

முன்னிலை:- திரு.ப.கிருஷ்ணமூர்த்தி, M.A. M.Phil.,

கோவில்பட்டி நகராட்சி — தனி அலுவலர்,
நாள்: 27.07.2021 — கோவில்பட்டி நகராட்சி

| மன்ற கூட்ட தேதி | வரசை எண் மற்றும் மன்றப்பொருள் | மன்றத் தீர்மானம் |
|---|---|---|
| 29.07.2021 | பொருள் எண்: 1<br>இந்நகராட்சிக்குட்பட்ட சிதம்பராபுரம் உரக்கிடங்கில் தேக்கி வைக்கப்பட்டுள்ள பழைய குப்பைகளை பயோ மைனாஸ் முறையில் அகற்றும் பணிக்கு கருத்து சமர்ப்பிக்க தெரிவிக்கப்பட்டுள்ளது. மேலும் கருத்துரு சமர்ப்பிக்கும் பொருட்டு சிதம்பராபுரம் உரக்கிடங்கில் தேக்கி வைக்கப்பட்டுள்ள குப்பைகளை தனியார் கன்ஸ்சல்டன்சி மூலம் அளவீடு செய்து அறிக்கை பெறுவதற்கு உத்தேச மதிப்பீட்டுச் செலவினம் ரூ.50,000/-க்கு மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.<br>அலுவலக குறிப்பு:- மன்றம் அனுமதிக்கலாம்.<br>ந.க.எண். 4006/2018/இ1 | தீர்மானம் எண். 4333<br>அலுவலக குறிப்பு :- அனுமதிக் கப்பட்டது. |
| | பொருள் எண்: 2<br>இந்நகராட்சிக்குட்பட்ட பகுதிகளில் தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியத்தின் மூலம் குடிநீர் அபிவிருத்தி திட்டத்தின் கீழ் அமைக்கப்பட்ட மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டி வளாகத்தில் புதியதாக LED மின்விளக்குகள் அமைக்கும் பணிக்கு ரூ.2.55 இலட்சம் மதிப்பீட்டில் மேற்கொள்ள இந்நகர்மன்ற தனி அலுவலர் அவர்களால் 29.01.2021ல் மன்ற எண். 4273 நிர்வாக அனுமதி வழங்கப்பட்டுள்ளது. அதன்படி மேற்படி பணிக்கு 06.07.2021 அன்று ஒப்பந்தப்புள்ளி கோரியதில் வரப்பெற்றுள்ள இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளின் விபரம். | தீர்மானம் எண். 4334<br>அலுவலக குறிப்பு :- அனுமதிக் கப்பட்டது. |

<table>
<tr>
<td></td>
<td>
<table>
<tr><td>1) ஸ்ரீகங்கா எலக்ட்ரிக்கல்ஸ்</td><td>..</td><td>மதிப்பீட்டைவிட (-) 0.63 % குறைவு</td></tr>
<tr><td>2)குமார் ஏஜென்ஜிஸ்</td><td>..</td><td>மதிப்பீட்டைவிட (-) 0.58 % அதிகம்</td></tr>
</table>
வரப்பெற்றுள்ள 2 ஒப்பந்தப்புள்ளிகளில் மதிப்பீட்டைவிட (--) 0.63% குறைவாக வழங்கியுள்ள நிறுவனம் ஸ்ரீ கங்கா எலக்ட்ரிக்கல்ஸ் நிறுவனத்தின் ஒப்பந்தப்புள்ளியை ஏற்க மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.
<u>அலுவலக குறிப்பு</u> :-
1) மன்றம் அனுமதிக்கலாம்.<br>2) ஆணையாளர் / தனி அலுவலர் அவர்களின் முன்அனுமதி பெற்று வேலை உத்திரவு வழங்கியதை மன்றம் அனுமதிக்கலாம்.
ந.க.எண். 4789/2020/இ1
</td>
<td></td>
</tr>
<tr>
<td></td>
<td>
<u>பொருள் எண்: 3</u>
இந்நகராட்சிக்குட்பட்ட பகுதிகளில் தெருவிளக்குகளை இயக்குவதற்காக புதியதாக 50 எண்ணம் Switch box வாங்கி பொருத்தும் பணிக்கு ரூ.2.80இலட்சம் மதிப்பீட்டில் மேற்கொள்ள இந்நகர்மன்ற தனி அலுவலர் அவர்களால் 31.05.2021ல் மன்ற எண்.4306 நிர்வாக அனுமதி வழங்கப்பட்டுள்ளது. அதன்படி மேற்படி பணிக்கு 06.07.2021 அன்று ஒப்பந்தப்புள்ளி கோரியதில் வரப்பெற்றுள்ள இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளின் விபரம்.
<table>
<tr><td>1) ஸ்ரீகங்கா எலக்ட்ரிக்கல்ஸ்</td><td>..</td><td>மதிப்பீட்டைவிட (-) 0.51 % குறைவு</td></tr>
<tr><td>2) குமார் ஏஜென்ஜிஸ்</td><td>..</td><td>மதிப்பீட்டைவிட (-) 0.10 % அதிகம்</td></tr>
</table>
வரப்பெற்றுள்ள 2 ஒப்பந்தப்புள்ளிகளில் மதிப்பீட்டைவிட (--) 0.51% குறைவாக வழங்கியுள்ள நிறுவனம் ஸ்ரீ கங்கா எலக்ட்ரிக்கல்ஸ் நிறுவனத்தின் ஒப்பந்தப்புள்ளியை ஏற்க மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.
<u>அலுவலக குறிப்பு</u> :-
1) மன்றம் அனுமதிக்கலாம்.<br>2) ஆணையாளர் / தனி அலுவலர் அவர்களின் முன்அனுமதி பெற்று வேலை உத்திரவு வழங்கியதை மன்றம் அனுமதிக்கலாம்.
ந.க.எண். 4789/2020/இ1
</td>
<td>தீர்மானம் எண். 4335<br>அலுவலக குறிப்பு:-<br>அனுமதிக் கப்பட்டது.</td>
</tr>
</table>

| | | |
|---|---|---|
| | <u>பொருள் எண்: 4</u><br>இந்நகராட்சியில் தூய்மை இந்தியா திட்டம் 2018-19ன் கீழ் 7வது மாநில உயர்மட்ட அதிகார குழுவினரால் அனுமதிக்கப்பட்டு, இந்நகராட்சி திடக்கழிவு மேலாண்மை பணிகளுக்காக பெறப்பட்டுள்ள 9 எண்ணம் இலகுரக வாகனங்கள் (TATA ACE make Light Commercial Vehicle) இந்நகராட்சி திடக்கழிவு மேலாண்மை பணிகளுக்காக பயன்படுத்தப்பட்டு வரப்படுகிறது. மேற்படி 9 எண்ணம் (TATA ACE make Light Commercial Vehicle)இலகுரக வாகனங்கள் திடக்கழிவு மேலாண்மை பணிகளுக்காக தினசரி மக்கும் மற்றும் மக்காத குப்பைகளை எடுத்துச் செல்வதற்காக இந்நகராட்சி 6 பொதுசுகாதாரப் பிரிவுகளிலும் தொடர்ந்து பயன்படுத்தப்பட்டு வரப்படுகிறது. மேலும், தினசரி திடக்கழிவு மேலாண்மை பணிகளில் சேகரமாகும் கழிவுகளை பொறுத்து உத்தேசமாக 60 முதல் 70 கிலோ மீட்டர் வரை பயன்படுத்தப்பட்டு வரப்படுகிறது. மேற்படி 9 வாகனங்களில் அவ்வப்போது ஏற்படும் பழுதுகளை நீக்கம் செய்வதற்கும், தேவைப்பட்டால் உதிரிபாகங்கள் மாற்றுவதற்கும், டயர்களை பழுதுபார்ப்பதற்கும், தேய்மானம் ஏற்படும் பட்சத்தில் புதிய டயர்கள் வாங்குவதற்கும், திடக்கழிவு மேலாண்மை பணியின் அவசர, அவசியம் கருதி TATA நிறுவனத்தினால் அங்கீகரிக்கப்பட்ட பணிமனையில் பழுதுநீக்கம் மற்றும் உதிரிபாகங்கள் மாற்றும் பணிகளை மேற்கொள்ளவும், டயர்களை பழுது பார்ப்பதற்கும், புதிதாக மாற்றம் செய்வதற்கும், உள்ளூர் விலைப்புள்ளி பெற்று பணிகள் மேற்கொள்வதற்கும், இதற்கான உத்தேச செலவினத் தொகை 2021-20222ம் ஆண்டிற்கு ரூ.5.00 இலட்சத்திற்கும் விலைப்புள்ளிகள் பெற்று பணி மேற்கொள்ளவும், மன்றம் அங்கீகாரம் வேண்டப்படுகிறது.<br><u>அலுவலக குறிப்பு</u>:-<br>1. மன்றம் அனுமதிக்கலாம்.<br>2. திடக்கழிவு மேலாண்மை பணியின் அவசர அவசியம் கருதி TATA நிறுவனத்தினால் அங்கீகரிக்கப்பட்ட பணிமனையில் பழுது நீக்கம் மற்றும் உதிரிபாகங்களை மாற்றும் பணிகளை மேற்கொள்ள அனுமதிக்கலாம்.<br>3. திடக்கழிவு மேலாண்மை பணியின் அவசர அவசியம் கருதி டயர்களை பழுது பார்ப்பதற்கும், புதிதாக மாற்றம் செய்வதற்கும் உள்ளூர் விலைப்புள்ளி பெற்று பணிகள் மேற்கொள்ள மன்றம் அனுமதி வழங்கலாம்.<br>ந.க.எண். 2193/2021/எச்1 | தீர்மானம் எண். 4336<br>அலுவலக குறிப்பு:- அனுமதிக் கப்பட்டது. |

| | | |
|---|---|---|
| | <u>பொருள் எண்: 5</u><br>இந்நகராட்சி பராமரிப்பிலுள்ள பழைய நகராட்சி அலுவலக கட்டிடத்தை இடித்து அப்புறப்படுத்திவிட்டு அதில் தரைதளம் மற்றும் முதல்தளம் கொண்ட வணிக கட்டிடம் கட்டுவதற்கான வரைபடத்திற்கு நகர் ஊரமைப்புத் துறையின் அனுமதி பெறப்பட்டுள்ளது. மேலும் அனுமதி பெறப்பட்ட வரைபடத்தின்படி வணிக கட்டிடம் கட்டுவதற்கு மண் பரிசோதனை செய்து அதன் அறிக்கையின் அடிப்படையில் கட்டிடத்தின் கம்பி வடிவமைப்பு (Structural Design) பெறுவதற்கும், கட்டிடத்தின் முகப்பு தோற்ற வடிவமைப்பு (Front Elevation Drawing) மற்றும் திட்டத்திற்கான மதிப்பீடு மற்றும் கருத்துரு தயார் செய்யும் பணியை தனியார் கன்ஸ்சல்டன்சி (Private Consultancy) நிறுவனம் மூலம் மேற்கொள்வதற்கும் அதற்கான உத்தேச மதிப்பீட்டுச் செலவினம் ரூ.5.00/-இலட்சத்திற்கு மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.<br><u>அலுவலக குறிப்பு</u> :- மன்றம் அனுமதிக்கலாம்.<br>ந.க.எண். 1307/2021/இ1 | தீர்மானம் எண். 4337 அலுவலக குறிப்பு:- அனுமதிக் கப்பட்டது |
| | <u>பொருள் எண்: 6</u><br>கோவில்பட்டி நகராட்சியில் 2021-22ம் ஆண்டிற்கான தேவையான பதிவேடுகள், ரசீதுகள், எழுதுபொருட்கள், டோனர்கள் மற்றும் பேப்பர்கள் வாங்குவதற்கு உத்தேச செலவுத் தொகை ரூ.20.00 இலட்சமாகும். (இருபது இலட்சம்) மேற்காணும் உத்தேச செலவுத் தொகை ரூ.20.00 இலட்சத்திற்கும் அரசு அங்கீகாரம் பெற்ற கூட்டுறவு நிறுவனங்களில் எழுதுபொருட்கள் வாங்க மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.<br><u>அலுவலக குறிப்பு</u> :-<br>1. மன்றம் அனுமதிக்கலாம்.<br>2. அரசு அங்கீகாரம் பெற்ற எழுது பொருட்கள் வாங்க அனுமதிக்கலாம்.<br>ந.க.எண்.2345/2021/பி2 | தீர்மானம் எண். 4338 அலுவலக குறிப்பு:- அனுமதிக் கப்பட்டது |

| | | |
|---|---|---|
| | <u>பொருள் எண்: 7</u><br>கோவில்பட்டி நகராட்சி பொறியியல் பிரிவில், திரு.ஆர்.செல்லப்பாண்டியன், 14.02.1995ம் தேதி முதல் ஓட்டுநராகவும், திரு.ந.சொர்ணராஜ், 28.07.2000ம் தேதி முதல் ஓட்டுநராகவும் பணிபுரிந்து வருகிறார்கள். மேற்காணும் இரண்டு ஓட்டுநர்கள் 20 ஆண்டுகள் மாசற்ற முறையில் பணி பார்த்த வகைக்கு அரசாணை நிலை எண்.238, நாள்.01.10.1997ன் படியும், நகராட்சி நிர்வாக இயக்குநர், சென்னை அவர்களின் ந.க.எண்.24817/J3/2020, நாள்:13.07.2021ல் வெகுமதி அளித்து ஆணையிடப்பட்டுள்ளது.<br>மேற்காணும் இரண்டு ஓட்டுநர்களுக்கு 20 ஆண்டுகள் மாசற்ற முறையில் பணி பார்த்த வகைக்கு அரசாணை நிலை எண்.238, நாள்.01.10.1997ன் படியும், நகராட்சி நிர்வாக இயக்குநர், சென்னை அவர்களின் ந.க.எண்.24817/J3/2020, நாள்.13.07.2021ல் வெகுமதி அளித்து ஆணையிடப்பட்டுள்ளதின் அடிப்படையில், சென்னையிலுள்ள எழுதுபொருள் மற்றும் அச்சுத்துறை இயக்குநர் அவர்கள் மூலமாக தங்கப்பதக்கம் தயாரிக்கவும், அதற்காகும் செலவுத் தொகைக்கும் மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.<br><u>அலுவலக குறிப்பு</u> :-<br>மேற்காணும் செலவுத் தொகையினை பொதுநிதியின் கீழ் செய்ய மன்றம் அனுமதி வழங்கலாம்.<br>ந.க.எண். 2815/2018/சி1 | தீர்மானம் எண். 4339<br>அலுவலக குறிப்பு:- அனுமதிக் கப்பட்டது |
| | <u>பொருள் எண்: 8</u><br>இந்நகராட்சி பொதுசுகாதாரப்பிரிவு விளம்பர வாகனம் எண்.TN69AS2778ல் ஏற்பட்டுள்ள பழுதுகளை நீக்கம் செய்வதற்கு உத்தேச செலவினத் தொகை ரூ.10,000/-க்கு மன்ற அனுமதிக்காக வேண்டப்படுகிறது.<br><u>அலுவலக குறிப்பு</u> :- மன்றம் அனுமதிக்கலாம்.<br>ந.க.எண். 2291/2021/எச்1 | தீர்மானம் எண். 4340<br>அலுவலக குறிப்பு:- அனுமதிக் கப்பட்டது |

<table>
<tr>
<td></td>
<td>
<u>பொருள் எண்: 9</u><br>
இந்நகராட்சி பொது சுகாதாரப்பிரிவு விளம்பர வாகனம் எண்.TN69AS2778ல் ஏற்பட்டுள்ள பழுதுகளை சரிசெய்வதற்கு 15.07.2021ம் தேதியில் விலைப்புள்ளி பெறப்பட்டது. இதில் கீழ்கண்ட இரண்டு விலைப்புள்ளிகள் வரப்பெற்றுள்ளன.
<table>
<tr><th>வ. எண்.</th><th>பெயர் மற்றும் முகவரி</th><th>தொகை ரூ.</th></tr>
<tr><td>1.</td><td>SENTHIL AANDAVAR AUTOMOTORS<br>Kovilpatti.</td><td>9150</td></tr>
<tr><td>2.</td><td>RKV MOTORS<br>3/535A, Tirunelveli Main Road,<br>Inamaniyachi, Kovilpatti</td><td>8019</td></tr>
</table>
வரப்பெற்றுள்ள விலைப்புள்ளிகளில் குறைவான விலைப்புள்ளி அளித்த RKV MOTORS, 3/535A, Tirunelveli Main Road, Inamaniyachi Kovilpatti–628501. விலைப்புள்ளியினை மன்ற அனுமதிக்காக வேண்டப்படுகிறது.<br>
<u>அலுவலக குறிப்பு</u>:-<br>
(அ) பொது சுகாதார அவசர, அவசியத்தை முன்னிட்டு விலைப்புள்ளி கோரியதையும், குறைவான விலைப்புள்ளி அளித்த RKV MOTORS, 3/535A, Tirunelveli Main Road, Inamaniyachi, Kovilpatti - 628 501. விலைப்புள்ளியினை அங்கீகரிக்கலாம்.<br>
ந.க.எண்.2291/2021/எச்1
</td>
<td>தீர்மானம் எண். 4341<br>அலுவலக குறிப்பு:-<br>அனுமதிக் கப்பட்டது</td>
</tr>
</table>

| | | |
|---|---|---|
| | <u>பொருள் எண்: 10</u><br>சென்னை உயர்நீதிமன்ற மதுரைக்கிளை துணை உதவி பதிவாளர் (ரிட்ஸ்) கடிதத்தில் திரு.செந்தில்குமார் த/பெ.சேர்மச்சாமி என்பவர் WP(MD) No.11483 of 2021 எண்ணிட்ட வழக்கு தாக்கல் செய்துள்ளதாக அறிவிப்பு வரப்பெற்றுள்ளது. இரண்டாவது பிரதிவாதியாக ஆணையாளர், கோவில்பட்டி நகராட்சி அவர்களுக்கும், நான்காவது பிரதிவாதியாக நகரமைப்பு ஆய்வாளர் அவர்களுக்கும் உரிய நீதிப் பேராணை உத்தரவு வழங்கிடக் கோரி தாக்கல் செய்துள்ளதாகவும் மற்றும் மேற்படி வழக்கானது மறுவிசாரணைக்கு 18.08.2021ம் தேதியன்று போடப்பட்டுள்ளதாக மேற்படி நீதிமன்ற இணை உதவிபதிவாளர் (ரிட்ஸ்)அவர்களது 14.07.2021ம் தேதிய அறிவிப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளதின் பேரின் அவசர, அவசியம் கருதி மேற்படி வழக்கில் நகராட்சி தரப்பில் உயர் நீதிமன்றத்தில் எதிர் வழக்காடுவதற்கு வழக்கறிஞர் திரு.பி.ஸ்ரீனிவாஸ் அவர்களை நியமனம் செய்யவும் மேற்கொள்ளப்பட்ட நடவடிக்கைக்கும் வழக்கிற்கு ஆகும் செலவினத்திற்கும் மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.<br><u>அலுவலக குறிப்பு</u> :- மன்றம் அனுமதிக்கலாம்.<br>(ந.க.எண். 2407/2021/எப்1) | தீர்மானம் எண். 4342<br>அலுவலக குறிப்பு:- அனுமதிக் கப்பட்டது |
| | <u>பொருள் எண்: 11</u><br>இந்நகராட்சி பொறியியல் பிரிவிலுள்ள வாகன எண்.TN 69 AV 5248ற்க்கான இன்ஸ்சூரன்ஸ் ஆகும் செலவினத் தொகை ரூ.11,419/-- யை United India Insurance Company Limited, Kovilpatti வழங்கிட மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.<br><u>அலுவலக குறிப்பு</u> :- மன்றம் அனுமதிக்கலாம்.<br>ந.க.எண். 2395/2021/இ1 | தீர்மானம் எண். 4343<br>அலுவலக குறிப்பு:- அனுமதிக் கப்பட்டது |

| | | |
|---|---|---|
| | <u>பொருள் எண்: 12</u><br>கோவில்பட்டி நகராட்சி எல்லைக்கு உட்பட்ட, கோவில்பட்டி வட்டம் மற்றும் நகரம் டவுண் சர்வே வார்டு C, பிளாக் எண்.25, நகரளவை எண்.4/1-ல் 3428 ச.மீ. பரப்பளவு கொண்ட நிலம் நகரளவு ஆவணங்களில் தாலுகா கச்சேரி என்றும் வருவாய் துறைக்கு பாத்தியப்பட்டுள்ளது என்றும் தொலை தொடர்பு துறைக்கு குத்தகைக்கு வழங்கப்பட்டுள்ளது என்றும் தொடர்பாக பசலி 1422 முதல் 1424 வரை குத்தகை நீட்டிப்பு செய்திடுவது தொடர்பாக வருவாய் துறையினரே முடிவு செய்து கொள்ளலாம் என நகர்மன்ற தீர்மானம் நிறைவேற்றலாம் என தெரிவித்துள்ளார். எனவே மேற்படி நிலத்தை தொலைதொடர்பு துறைக்கு குத்தகை நீட்டிப்பு செய்ய நகர்மன்றத்தின் பார்வைக்கும், முடிவிற்கும் வைக்கப்படுகிறது.<br><u>அலுவலக குறிப்பு</u> :-<br>கோவில்பட்டி நகரம் டவுண் சர்வே வார்டு C, பிளாக் எண்.25, நகரளவை எண்.4/1-ல் சர்க்கார் புறம்போக்கு தாலுகா கச்சேரி என்று நகரளவை ஆவணங்களில் பதிவாகி உள்ளதாகவும் மற்றும் வருவாய் துறைக்கு பாத்தியப்பட்ட 43420 ச.மீ. பரப்பளவு இடத்தில் 20 செண்டு (809.37 ச.மீ) பரப்பளவு நிலத்தினை தொலை தொடர்பு துறைக்கு குத்தகை நீட்டிப்பு செய்வதற்கு உரிய நகரளவை வரைபடம் மற்றும் பதிவேடு நகல் நகரசார் ஆய்வாளரால் தயார் செய்து சமர்ப்பிக்கப்பட்டுள்ள நகரசார் ஆய்வர் குறிப்பின்படியும் மற்றும் நகரளவை ஆவணங்களின் படியும் மேற்படி நிலம் வருவாய் துறைக்கு பாத்தியப்பட்டதாக உள்ளதால் தொலை தொடர்பு துறைக்கு குத்தகை நீட்டிப்பு செய்து வழங்க வருவாய் துறையினர் முடிவு செய்துகொள்ள இசைவு அளிக்கலாம்.<br>(ந.க.எண். 2434/2021/எப்1) | தீர்மானம் எண். 4344<br>அலுவலக குறிப்பு:- அனுமதிக் கப்பட்டது |
| | <u>பொருள் எண்: 13</u><br>கோவில்பட்டி நகராட்சி எல்லைக்கு உட்பட்ட, கோவில்பட்டி வட்டம் மற்றும் நகரம் டவுண் சர்வே வார்டு C, பிளாக் எண்.25, நகரளவை எண்.4/1-ல் 3428ச.மீ. பரப்பளவு கொண்ட நிலம் நகரளவு ஆவணங்களில் தாலுகா கச்சேரி என்றும் வருவாய் துறைக்கு பாத்தியப்பட்டுள்ளது என்றும் தொலை தொடர்பு துறைக்கு குத்தகைக்கு வழங்கப்பட்டுள்ளது என்றும் தொடர்பாக பசலி 1425 முதல் 1427 வரை குத்தகை நீட்டிப்பு செய்திடுவது தொடர்பாக வருவாய் துறையினரே முடிவு செய்து கொள்ளலாம் என நகர்மன்ற தீர்மானம் | தீர்மானம் எண். 4345<br>அலுவலக குறிப்பு:- அனுமதிக் கப்பட்டது |

| | | |
|---|---|---|
| | நிறைவேற்றலாம் என தெரிவித்துள்ளார். எனவே மேற்படி நிலத்தை தொலைதொடர்பு துறைக்கு குத்தகை நீட்டிப்பு செய்ய நகர்மன்றத்தின் பார்வைக்கும், முடிவிற்கும் வைக்கப்படுகிறது.<br>அலுவலக குறிப்பு :-<br>கோவில்பட்டி நகரம் டவுண் சர்வே வார்டு C, பிளாக் எண்.25, நகரளவை எண்.4/1-ல், சர்க்கார் புறம்போக்கு தாலுகா கச்சேரி என்று நகரளவை ஆவணங்களில் பதிவாகி உள்ளதாகவும் மற்றும் வருவாய் துறைக்கு பாத்தியப்பட்ட 43420 ச.மீ. பரப்பளவு இடத்தில் 20 செண்டு (809.37 ச.மீ) பரப்பளவு நிலத்தினை தொலை தொடர்பு துறைக்கு குத்தகை நீட்டிப்பு செய்வதற்கு உரிய நகரளவை வரைபடம் மற்றும் பதிவேடு நகல் நகரசார் ஆய்வாளரால் தயார் செய்து சமர்ப்பிக்கப்பட்டுள்ள நகரசார் ஆய்வர் குறிப்பின்படியும் மற்றும் நகரளவை ஆவணங்களின் படியும் மேற்படி நிலம் வருவாய் துறைக்கு பாத்தியப்பட்டதாக உள்ளதால் தொலை தொடர்பு துறைக்கு குத்தகை நீட்டிப்பு செய்து வழங்க வருவாய் துறையினர் முடிவு செய்துகொள்ள இசைவு அளிக்கலாம்.<br>(ந.க.எண். 2434/2021/எப்1) | |
| | பொருள் எண்: 14<br>கோவில்பட்டி நகராட்சி எல்லைக்கு உட்பட்ட, கோவில்பட்டி வட்டம் மற்றும் நகரம் டவுண் சர்வே வார்டு C, பிளாக் எண்.25, நகரளவை எண்.4/1-ல் 3428 ச.மீ. பரப்பளவு கொண்ட நிலம் நகரளவு ஆவணங்களில் தாலுகா கச்சேரி என்றும் வருவாய் துறைக்கு பாத்தியப்பட்டுள்ளது என்றும் தொலை தொடர்பு துறைக்கு குத்தகைக்கு வழங்கப்பட்டுள்ளது என்றும் தொடர்பாக பசலி 1428 முதல் 1430 வரை குத்தகை நீட்டிப்பு செய்திடுவது தொடர்பாக வருவாய் துறையினரே முடிவு செய்து கொள்ளலாம் என நகர்மன்ற தீர்மானம் நிறைவேற்றலாம் என தெரிவித்துள்ளார். எனவே மேற்படி நிலத்தை தொலைதொடர்பு துறைக்கு குத்தகை நீட்டிப்பு செய்ய நகர்மன்றத்தின் பார்வைக்கும், முடிவிற்கும் வைக்கப்படுகிறது.<br>அலுவலக குறிப்பு :-<br>கோவில்பட்டி நகரம் டவுண் சர்வே வார்டு C, பிளாக் எண்.25, நகரளவை எண்.4/1-ல், சர்க்கார் புறம்போக்கு தாலுகா கச்சேரி என்று நகரளவை ஆவணங்களில் பதிவாகி உள்ளதாகவும் மற்றும் வருவாய் துறைக்கு பாத்தியப்பட்ட 43420 ச.மீ. பரப்பளவு இடத்தில் 20 செண்டு (809.37 ச.மீ) பரப்பளவு நிலத்தினை தொலை தொடர்பு துறைக்கு குத்தகை நீட்டிப்பு செய்வதற்கு உரிய நகரளவை வரைபடம் மற்றும் | தீர்மானம் எண். 4346<br>அலுவலக குறிப்பு:- அனுமதிக் கப்பட்டது |

| | | |
|---|---|---|
| | பதிவேடு நகல் நகரசார் ஆய்வாளரால் தயார் செய்து சமர்ப்பிக்கப்பட்டுள்ள நகரசார் ஆய்வர் குறிப்பின்படியும் மற்றும் நகரளவை ஆவணங்களின் படியும் மேற்படி நிலம் வருவாய் துறைக்கு பாத்தியப்பட்டதாக உள்ளதால் தொலை தொடர்பு துறைக்கு குத்தகை நீட்டிப்பு செய்து வழங்க வருவாய் துறையினர் முடிவு செய்துகொள்ள இசைவு அளிக்கலாம்.<br>(ந.க.எண். 2434/2021/எப்1) | |
| | <u>பொருள் எண்: 15</u><br>கோவில்பட்டி நகராட்சியில் 2019-2020ம் ஆண்டு தணிக்கை உள்ளாட்சிநிதி தணிக்கை இயக்குநர், தூத்துக்குடி அவர்களால் மேற்கொள்ளப்பட்டு அதற்கான அறிக்கை பெறப்பட்டுள்ளது. 2019-2020ம் ஆண்டு தணிக்கை மேற்கொண்டதற்கு பத்தி எண்.146ல் தணிக்கை கட்டணம் ரூ.369665/-ஐ (மூன்று இலட்சத்து அறுபத்து ஒன்பதாயிரத்து அறுநூற்று அறுபத்தைந்து மட்டும்) அரசு கணக்கில் செலுத்த வருவாய் மற்றும் மூலதனநிதி தணிக்கை பத்தி எண்.171ல் அறிவுறுத்தப்பட்டுள்ளது. மேற்காணும் தணிக்கை கட்டணம் ரூ.369665/-ஐ அரசு கணக்கில் செலுத்த மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.<br><u>அலுவலக குறிப்பு</u> :- மன்றம் அனுமதிக்கலாம்.<br>ந.க.எண். 2891/2006/சி1 | தீர்மானம் எண். 4347<br>அலுவலக குறிப்பு:-<br>அனுமதிக் கப்பட்டது |